### சேலம் அருகே கேரிபேக் தயாரித்த

# பிளாஸ்டிக் நிறுவனத்தின் மின் இணைப்பு துண்டிப்பு

சேலம், அக். 11: சேலம் அருகே நிலவாரப்பட்டியில் தடைசெய்யட்ட கேரி பேக்கை தயாரித்த ஒரு பிளாஸ்டிக் நிறுவனத்தின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது.

தமிழகம் முழுவதும் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய மக்காத தன்மை கொண்ட பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து பிளாஸ்டிக்பொருட்களை பயன்படுத்துவதையும், விற்பனை செய்வதையும் தடுக்க கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு, தொடர் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தும் கடைகளுக்கு அபராதமும் வசூலிக்கப்பட்டு வருகிறது. மாசுக்கட்டுப்பாடு வாரிய அதிகாரிகள், பிளாஸ்டிக்பொருட்களை தயாரிக்கும் நிறுவனங்களை தீவிரமாக கண்காணித்து வந்தனர். சேலம் பள்ளப்பட்டி, செவ்வாய்பேட்டை பகுதியில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தயாரித்து வந்த 5 பிளாஸ்டிக் நிறுவனங்களை மூடி சீல் வைத்தனர். இதைதொடர்ந்து, சேலம் அருகே நிலவாரப்பட்டியில் மாசுக்கட்டுப்பாடுவாரிய அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அதில், அங்கு தடை செய்யப்பட்ட கேரிபேக்கை தயாரித்த ஒரு பிளாஸ்டிக்நிறுவனம் கண்டறியப்பட்டது. பின்னர், விதிமுறையை மீறி செயல்பட்ட அந்த பிளாஸ்டிக் நிறுவனத்தின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. அங்கு பதுக்கி வைத்திருந்த 500 கிலோ பிளாஸ்டிக்பொருட்களை பறிமுதல் செய்தனர்.

Scanned by CamScanner